## மார்ச் மாதத்தில்

# மெட்ரோ ரெயிலில் 28.17 லட்சம் பேர் பயணம்

## அதிகாரிகள் தகவல்

சென்னை, ஏப்.2-

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நிறுத்தப்பட்ட சேவை கடந்த ஆண்டு செப்டம்பர் 7-ந்தேதி முதல் தொடங்கி நடந்து வருகிறது. இதில் கடந்த மாதம் 31-ந்தேதி வரை 93 லட்சத்து 68 ஆயிரத்து 304 பயணிகள் பயணம் செய்து உள்ளனர்.

இதில் மார்ச் மாதம் மட்டும் 28 லட்சத்து 17 ஆயிரத்து 510 பேர் பயணித்துள்ளனர். அதிகபட்சமாக கடந்த மாதம் 8-ந்தேதி 1 லட்சத்து ஆயிரத்து 163 பேர் பயணம் செய்தனர். கியூஆர் குறியீடு பயணச்சீட்டு முறையை பயன்படுத்தி 2 லட்சத்து 12 ஆயிரத்து 941 பேரும், பயண அட்டை பயணச்சீட்டை பயன்படுத்தி 47 லட்சத்து 81 ஆயிரத்து 943 பயணிகள் பயணம் செய்துள்ள னர்.

மீதம் உள்ளவர்கள் டோக்கன் டிக்கெட்டுகளை பெற்று உள்ளனர். கியூஆர் குறியீடு மற்றும் பயண அட்டைகளை பயன்படுத்தும் பயணிகளுக்கு கட்டணத்தில் 20 சதவீதம் தள்ளுபடி அளிக்கப்படுகிறது. நோய் தொற்று பரவாமல் தடுக்க பயணிகள் முககவசம் அணிவதுடன், சமூக இடைவெளியை பின்பற்றவும் கேட்டு கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவல்களை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.